# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8102199

1. District மாவட்டம் : Chennai PS: காவல்நிலையம் V&AC CC-I Year: ஆண்டு 2023 FIR No.: மு.த.அ. எண் 2/23 Date: நாள் 17.8.2023

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act Sections பிரிவுகள்: U/s 7 of PC Act 1988 Amended 2018
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : —

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 14.8.23 Date to : நாள் வரை 14.8.23
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 17.30 Time to : நேரம் வரை —
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 17.8.23 Time : நேரம் 10.30 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ ~~Oral~~ : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் TAMIL NADU ELECTRICAL LICENSING BOARD SIDCO INDUSTRIAL ESTATE, (GUINDY) 3.8 KMS SOUTH
Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி —
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் R. Krishnakumar (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Tr. S.P. Rajendiran
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 58 yrs (d) Nationality நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
(f) Occupation : தொழில் Electrical Contractor (g) Address : முகவரி Semmu kutty Associates No 2/171, Gandhi Street, Theerthagiri Pattu, Redhills, Chennai-52.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr. Sridhar, Office Superintendent, Tamil Nadu Electrical Licensing Board, Water Works Rd, Sidco Industrial Estate Guindy - Ch-32.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

— No delay —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) : —
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet is Enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...Inspector... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

(signature) 17-8-23

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

(signature) 17/8/23

15. Date & Time of despatch to the court: 17/8/23
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் V. Selvi
Rank: நிலை Inspector of Police. No. எண் ......
Vigilance & Anti Corruption
Chennai City - I Detachment
Alandur, Chennai - 16.

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21 3 16(HCL-12)p 2

**FIR - V&AC, CC-1, Cr.No.02/2023 (Column-12) தொடர்ச்சி:**

17.08.2023-ந் தேதி காலை 10.30 மணியளவில் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, சென்னை நகர பிரிவு-1-ன் காவல் ஆய்வாளர் V.செல்வி ஆகிய நான் அலுவலகத்தில் பணியிலிருந்தபோது சென்னை-600 052, செங்குன்றம், தீர்த்தகிரியம்பட்டு, காந்தி தெரு, எண்.2/171-ல் வசிக்கும் திரு.இரா.கிருஷ்ணகுமார் வயது. 58, த/பெ. ச.ப. இராஜேந்திரன் என்பவர் அலுவலகம் வந்து கொடுத்த எழுத்து மூலமான புகாரின் பேரில் மறைமுக விசாரணை மேற்கொண்டு இன்று 17.08.2023-ம் தேதி காலை 11.30 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். எழுத்து மூலமான புகாரின் விவரம் பின்வருமாறு:- 17.08.2023 விடுநர்: இரா.கிருஷ்ணகுமார் வயது. 58, த/பெ. ச.ப. இராஜேந்திரன், 2/171, காந்தி தெரு, தீர்த்தகிரியம்பட்டு, செங்குன்றம், சென்னை-600 052. பெறுநர்: காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, ஆலந்தூர், சென்னை-600 016. உயர்திரு.அம்மா, நான் மேற்கண்ட முகவரியில் எனது குடும்பத்தோடு வசித்து வருகிறேன். கடந்த எட்டு ஆண்டுகளாக செம்புகுட்டி அஸோசியேட்ஸ் என்கிற பெயரில் மின் நிறுவனம் நடத்தி வருகிறேன். என் நிறுவனம் பல அடுக்குமாடி கட்டிடங்கள் மற்றும் அரசு அலுவலகங்களில் மின் நிறுவல் பணிகளை செய்து வருகிறது. இப்பணிகளை மேற்கொள்ள நான் முறையாக "இஏ" தரச் சான்று தமிழ்நாடு மின்சார உரிமம் வாரியத்திடமிருந்து கடந்த 2017-ல் பெற்று ஒப்பந்த மின் பணிகளை செய்து வருகிறேன். உரிமத்தை இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பிக்க வேண்டும். அதன்படி 2022-2023-க்கான உரிமம் 23.07.2023 அன்று முடிவடைய இருப்பதால் மின் உரிமம் வாரியத்தில் முறைப்படி முடிவடையும் தேதியிலிருந்து 3 மாதத்திற்கு முன்னதாக விண்ணப்பிக்க வேண்டும். அதன்படி நான் 05.05.2023-ம் அதற்கான (புதுப்பிப்பதற்கு தேவையான) ஆவணத்தை இணைத்து, DD மூலமாக சேவை கட்டணத்தையும் செலுத்தி விண்ணப்பித்தேன். எனக்கு கடந்த 23.07.2023 உடன் முடிவடைந்த உரிமம் புதுப்பிக்கப்பட்டு முடிவடைந்த தேதியிலிருந்து ஒரிரு வாரகாலத்தில் வழங்கியிருக்க வேண்டும். அவ்வாறு வழங்கப்படாததால் நான் கடந்த 10.08.2023-ம் தேதி தமிழ்நாடு மின் உரிமம் வாரிய அலுவலகம், கிண்டி சென்று டெப்புடி செக்ரட்டரி (Deputy Secretary) அவர்களை சந்தித்து, என்னுடைய மின் உரிமம் புதுப்பித்தல் சம்பந்தமாக கேட்டேன். அதற்கு அவர்கள் சமர்ப்பித்த ஆவணங்களை சரிபார்த்துவிட்டு, உங்கள் உரிமம் புதுப்பிக்கப்பட்டுள்ளது, நீங்கள் சம்மந்தப்பட்ட அலுவலக கண்காணிப்பாளரை சந்தித்து பெற்றுக்கொள்ளுமாறு கூறினார். நானும், 10.08.2023 அன்று மதியம் 3 மணியளவில் திரு.ஸ்ரீதர், அலுவலக கண்காணிப்பாளர் அவர்களை சந்தித்து என்னுடைய உரிமம்

சம்மந்தமாக கேட்டேன். அதற்கு அவர் என்னை வெளியில் காத்திருங்கள். நான் 3.00 மணியிலிருந்து 5.30 மணிவரை காத்திருந்தபோது, அங்கு பணிபுரியும் பியூன் ஒருவர் என்னிடத்தில் வந்து நீங்கள் இப்படியே தான் காத்திருக்க வேண்டும். எனவே மறுபடியும் அலுவலக கண்காணிப்பாளர் திரு.ஸ்ரீதரை பாருங்கள் என்று கூறினார். நான் திரு.ஸ்ரீதரிடம் சென்று உரிமம் பற்றி கேட்டேன். அதற்கு அவர் என்னை எதுவுமே கவனிக்காமல் மின் உரிமம் கேட்டால் எப்படி, நீங்கள் ரூ.10,000/- கொடுத்தால் மின் உரிமம் வழங்குவேன் என்று கூறினார். மேலும் கேட்ட பணத்துடன் திங்கள் கிழமை 14.08.2023 அன்று வந்து பார்க்கும்படி கூறி அனுப்பி வைத்தார். நானும், 14.08.2023 அன்று மாலை சுமார் 5.30 மணியளவில் திரு.ஸ்ரீதர் அவர்களை சந்தித்தபோது, என்ன நான் கேட்டது கொண்டுவந்திருக்கிறீர்களா என்று கேட்டார். நான் அப்போது அவரிடம் என்னால் அவ்வளவு பணம் கொடுக்க முடியாது, சரியானப்படி தற்போது மின் ஒப்பந்த வேலைகளும் சரியாக இல்லை என்று கூறினேன். அதற்கு அவர் ரூ.5000/- கொடு என்று கூறினார். நான் என்னால் அவ்வளவு கொடுக்க முடியாது என்று கூறியதற்கு, அவர், சரி ரூ.3000/- கொடுத்துவிட்டு உரிமம் பெற்றுக் கொள் என்று கூறினார். எனவே, எனக்கு பணம் லஞ்சமாக கொடுக்க விருப்பமில்லை. என்னிடம் லஞ்சமாக பணம் கேட்ட திரு.ஸ்ரீதர், கண்காணிப்பாளர், தமிழ்நாடு மின் உரிமம் வாரியம் என்பவர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கும் படி கேட்டுக் கொள்கிறேன். ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறையில் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு முழு ஒத்துழைப்பு தருகிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இப்படிக்கு Sd XXXXX R.Krishnakumar 17.08.23. Sir, Received the complaint today 17.08.23 at 10.30 hrs and after making Preliminary enquiry, verified the genuiness of the complaint and reputation of the accused, registered a case in V&AC, Chennai City-1 Detachment Cr.No.02/AC/2023/CC-1 u/s 7 of Prevention of Corruption Act, 1988 Amendment 2018 on 17.08.2023 at 11.30 hrs. Sd XXXX V.Selvi, Inspector of Police, V&AC, Chennai City-1, Alandur, Chennai-16 17/8/23. I herewith submitted the original F.I.R and the complaint to the Hon'ble Special Judge for the cases under the Prevention of Corruption Act, Chennai. I also forwarded the copy of F.I.R to officers concerned.

V.Selvi 17/8/23
Inspector of Police
V&AC, CC-I
Alandur, Ch-16.